# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஐப்பசி 10 புதன்கிழமை (27-10-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 287


# வட. - கிழக்கு நிலையை ஆராய்ந்த பிறகே நியமனத் திகதி முடிவாகும்

## முருங்கனில் தாக்குதல்

மன்னார், ஒக். 27

மன்னார் மாவட்டத்தில் முருங்கன் பொலீஸ் நிலையம் அருகே நேற்றுக் காலை 11 மணியளவில் பதுங்கியிருந்த விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்! இரு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மன்னார் - அநுராதபுரம் வீதி ஊடான போக்குவரத்து நேற்றுப் பிற்பகல் வரை தடைப்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

வவுனியா, ஒக். 27

இரணை இலுப்பைக்குளம் கல்மடுப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாதோரால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தேவசகாயம் பாக்கியநாதன் (39 வயது என்ற 4 பிள்ளைகளின் தந்தையே கொல்லப்பட்டவராவார்.

(ஐ-3-16)

## புலிகளின் சடலங்களாம்

யாழ்ப்பாணம், ஒக். 27

கேரதீவு அறுகுவெளிக் கடற்கரைப் பகுதியில் கடந்த 16 ஆம், 19 ஆம் திகதிகளில் கரை ஒதுங்கிய ஏழு சடலங்களும் விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுடையவையே என்று இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் சிப்பாய் தற்கொலை

தென்மராட்சி, ஒக். 27

விடுமுறையில் வீடு செல்ல அனுமதி கிடைக்காததால் விரக்தியடைந்த சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஆனையிறவு முகாமில் இடம் பெற்றது.

படைச்சிப்பாயான ஆர். எம். பீ. ரத்நாயக்கா (வயது

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் தேடுதல்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு கொட்டாஞ்சேனை சிவானந்தா வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட தேடுதலில் பெண் ஒருவர் உட்பட எட்டுத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள வீடுகளில் படையினரால் சோதனைகளும் நடத்தப்பட்டுள்ளன.

[ஐ-3]

## படை அதிகாரிகளின் ஆலோசனைபெறப்படும்

கொழும்பு, ஒக்ரோபர் 27

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகின்றதா என்பதை ஆராய்ந்து முடிவு செய்த பின்னரே, ஜனாதிபதித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைக் கோரும் திகதியை நிர்ணயிப்பது எனத் தேர்தல் திணைக்களம் முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக வடக்கு - கிழக்கில் உள்ள சகல நிர்வாக அதிகாரிகளுடனும் படை அதிகாரிகளுடனும் இந்த வாரம் பேச்சு நடத்தப்பட்டு அவர்களின் ஆலோசனை பெறப்படும் என்று தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் தேர்தலை நடத்துவது தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

தேர்தல் நடத்துவதற்கு உகந்த பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகப் படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கையை இந்தியா ஆதரிக்கும்

### வெளிவிவகார அமைச்சு அறிக்கை

கொழும்பு, ஒக். 27

ஐக்கியமும் ஒற்றுமைப்பாடும் மிக்க இலங்கையையே வாஜ்பாய் தலைமையிலான அரசு தொடர்ந்து ஆதரிக்கும் என்று இந்தியா உறுதியளித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டணியின் மூத்த உறுப்பினர் ஸ்ரீபாஸ்கரன் காலமானார்

கொழும்பு, ஒக், 27

வலி. வடக்குப் பிரதேச சபையின் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆரம்பகால உறுப்பினருமான சு. ஸ்ரீபாஸ்கரன் (வயது 68) நேற்றிரவு 7. 30 மணிக்கு கொழும்பில் தனியார் மருத்துவமனை ஒன்றில் காலமானார்.

நீண்ட நாள்களாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவேளை நேற்றுக் காலமானார்.

அவரது பூதவுடல் இன்று பிற்பகல் 3.00 மணி முதல் கொழும்பில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் நாளை பூதவுடல் மல்லாகத்துக்கு எடுத்துவரப்படும்.

நீண்டகாலமாக தமிழர்களின் அரசியல் போராட்டத்துடன் தன்னை இணைத்திருந்த இவர் 1961 ஆம் ஆண்டு யாழ். செயலகம் முன்பாக இடம்பெற்ற சத்தியாக்கிரகப் பேராட்டத்தில் முக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவுக்குஆதரவளிப்பதாக பத்துக் கட்சிகளும் உறுதிமொழி

கொழும்பு, ஒக். 27

விரைவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குப் பூரண ஆதரவு வழங்குவதென பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் பத்து அரசியல்கட்சிகளும் உறுதி அளித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

அந்தக்கூட்டத்தில் வைத்தே இந்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது என்றும்—

இ. தொ. கா., ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகியவற்றின் தலைவர்களும் பங்குபற்றினர் என்றும் –சொல்லப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டி நடத்துவதற்கான காரணங்களை அங்கு ஜனாதிபதி விளக்கினார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் எடுக்கும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவனை விடுவிக்கக் கோரி கலைப்பீடமாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

நேற்று முன்தினம் படையினரால் கைது செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக கலைப்பீட 3 ஆம் வருட மாணவனான செல்வநாயகம் செல்வேந்திரனை விடுதலை செய்யக் கோரி வகுப்புப் பகிஷ்கரிப்புப்போராட்டம் ஒன்றை பல்கலைமாணவர்கள் நேற்று ஆரம்பித்தனர்.

கலைப்பீடத்தின் 3 ஆம் வருடமாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்டத்தில் கலைப்பீடத்தைச் சேர்ந்த ஏனைய வருட மாணவர்களும் இன்று இணைந்து கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஏனைய பீடங்களைச்சேர்ந்த மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுவார்கள் என அறியப்படுகின்றது.

512 ஆவது படையணி அலு

[10 ஆம் பக்கம் பார்க்க]

## நிறுத்தாமல் சென்ற ஜீப்மீது மருதானையில் படையினர் சூடு!

கொழும்பு, ஒக். 27

மருதானை சென்ரல் தியேட்டருக்கு முன்பாகவுள்ள சோதனை நிலையத்தில் தரிக்காமல் சென்ற ஜீப் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் காயம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 11—30 மணியளவில் சோதனை நிலையத்துக்கு அருகே வைத்து அந்த ஜீப்பை படையினர் வழிமறித்தனர் என்றும்—

ஆனால் ஜீப்பை நிறுத்தாமல் செலுத்திச் சென்றதால் அதன் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

ஜீப்பில் இருந்து தப்ப முயன்ற இருவர் காயம் அடைந்தனர் என்றும்— கூறப்பட்டது

இந்தச் சம்பவம் தொடர்பாக நால்வரை பொலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ-3)

## அநாவசியமான கைதுகளைத்தடுக்க கோருகின்றனர் தமிழ் எம். பிக்கள்

### ஜனாதிபதி தலைமையில் ஆராயப்படும்

கொழும்பு, ஒக். 27

கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களில் தமிழர்கள் அநாவசியமாகக் கைது செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் என்று அரசை ஆதரிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தின் போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இ. தொ. கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான், அந்த கட்சி உறுப்பினர்களான பி. தேவராஜ். ஆர். யோகராஜன், அமைச்சர் அலவி மௌலானா ஆகியோரே இந்தக்கோரிக்கையை விடுத்தனர்.

அநாவசியமாக தமிழர் கைது செய்யப்படுவதை நிறுத்துவது தொடர்பாக ஆராயுமாறு தொல்லை தவிர்ப்புக் குழுவின் தலைவரும், அமைச்சருமான லக்ஷ்மன் ஜெயக்கொடிக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

தொல்லை தவிர்ப்புக் குழு இது தொடர்பாக படை அதிகாரிகளுக்கு பல தடவைஎடுத்துக் கூறியும் எந்த வித ந-

[10 ஆம் பக்கம் பார்க்க]

# மரண அறிவித்தல்கள்

## கனகசபாபதி மணிமாறன்
(நனா)

குருவீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமான மணிமாறன் 23 — 10 — 99 இல் காலமானார்.

இவர் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி, காலஞ்சென்ற அமிர்தகௌரிநாயகி (டாலி) ஆகியோரின் பாசமிகு மகனும், மணிவண்ணன் [அப்பு], மணிமொழி (பிள்ளை), மணிவிழி (தேனு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தர்சினியின் மைத்துனரும், காங்கேசன்துறை குருவீதியைச்சேர்ந்த காலஞ்சென்ற திரு திருமதி அ. குருநாதபிள்ளை, சண்டிலிப்பாய், ஆலங்குளாயைச் சேர்ந்த காலஞ் சென்ற பொன்னையா தம்பதிகள் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (26 - 10 - 99) செவ்வாய்க்கிழமை அன்று கனடாவில் நடைபெற்றன.

95, Holland Park Averoke
Toranto – M6 E1 L5,
Phone: 001-416-6528-309

தகவல்:
சொர்ணலட்சுமி
குருசாமி,

ஆலங்குளாய்,
சண்டிலிப்பாய். (70361)

## துரையப்பா சீவரத்தினம் மான்

சாவகச்சேரி கெருடாவிலைச் சேர்ந்த துரையப்பா சீவரத்தினம் மான் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன மேற்பார்வையாளர்) கடந்த வெள்ளிக்கிழமை (22-10-99). கர்த்தருக்குள் மகிமையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பொன்னம்மாவின் அன்புக் கணவரும் சுப்பிரமணியம் [இந்தியா], தேவமலர், திருமதி பா. தேவராணி [இந்தியா], செல்வி எலிசா பாக்கியதேவி [UK], காலஞ் சென்ற திருமதி எலிசபெத் செல்வமணி [UK], மோசஸ் மான் [UK], காலஞ்சென்ற சொலமன் மான், திருமதி திரேசா [கனடா], திருமதி பிலோமினா [கனடா], திருமதி விக்ரோறியா [UK], டேவிட் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், புஸ்பராணி, பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், ஜெனற், ஞானகுணசீலன், ஜெனீந்திரன், திருஞானசந்தன், வசந்தமலர் ஆகியோரின் மாமனாரும் திருமதி இ. மனோன்மணி, சி. எஸ். மான் (கொழும்பு) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-10-99) புதன் காலை 10 மணிக்கு நல்லடக்க ஆராதனையின் பின் சாவகச்சேரி தென் இந்தியத் திருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தேவமலர்
(மகள்)

கெருடாவில்,
சாவகச்சேரி. (சி/9532)

## திருமதி யோண்பிள்ளை அடைக்கலம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோண்பிள்ளை அடைக்கலம் 25-10-99 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோண் பிள்ளையின் அன்பு மனைவியும் பிரான்சிஸ் (கனடா), பீற்றர் வின்சன்டிபோல் (கனடா), ஜெயமலர் [கனடா], மனோரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் திலகவதி (கனடா), அரசகுலம் (கனடா), கனகரட்ணம் (கனடா), அருள்பேட் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் டீஸ்ரன், தேஸ்ரன், கமில்ரன், கஸ்ரன், ஜொய்ஸ்ரன், கிளின்ரன், ஸ்பிலன்டன், சுதர்சன், றெனி, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-10-99) புதன்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் (புதியநேரம்) புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ. ரவி

15, கடற்கரை வீதி,
ஈச்சமோட்டை. (70368)

## கணபதி சின்னத்தம்பி

மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த கணபதி சின்னத்தம்பி நேற்று 26—10—99 செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும் கந்தசாமி, நவீந்திரன் (ஹொலன்ட்), காலஞ்சென்ற தவமலர், சுந்தரேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மகேஸ்வரி, சுகுமாரி, யோகேந்திரன் (இலங்கை மின்சார சபை, சாவகச்சேரி—முன்னாள் மின் ஊழியர் நகரசபை, சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும் அம்பிகா, யசோ, றஞ்சன், மயூரன், சசி, அனுஜா, பிரசாந்தி, சங்கர், ரகுணா, லக்சனன் லக்சியா, யதுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26-10-99) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
ந. யோகேந்திரன்
(மருமகன்)

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (சி/9531)

## பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, ஒக். 27

கொக்குவில் மேற்கு சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி மா. வேதநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி க. சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகவும் லயன் இ. செல்வநாதன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் இ. தவராஜலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (க-135)

★ ★ ★

உடுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த விழாவில் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் பிரதம விருந்தினராகவும் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-152)

## 102தபால்பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஒக். 27

நேற்று காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கப்பலில் குடாநாட்டுக்கான 102 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை தரம்பிரிக்கப்பட்டு இன்று விநியோகிக்கப்படவுள்ளன.

இதேவேளை—

குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர் தபால்கள் அடங்கிய 44 தபால்பொதிகள் இதே கப்பல்மூலம் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. [ஐ-9-4]

## நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். பல்கலைக்கழக உடற் கல்வித்துறைக்கான தற்காலிக விரிவுரையாளர்களையும் போதனாசிரியர்களையும் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு நாளை பிற்பகல் 1 மணிக்குநடைபெறவுள்ளது. (ஐ-4-9)

லிபேட்டி அச்சுவேலி
சிவாஜிகணேசன்
ஜெயலலிதா
நடித்த
சவாலே சமாளி
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No. 070-212223
070 - 212678
(70166)

ராஜா
யாழ்ப்பாணம்
கார்த்திக் - நக்மா
மற்றும் பலர் நடித்த
மேட்டுக்குடி
10 30, 2-30
(சி/9346)

நாகஸ்ஸ
சுன்னாகம்
மம்முட்டி - தேவயானி
நடித்த
மறுமலர்ச்சி
காட்சிகள்:
11-00, 2-30, 5-15
(புதிய நேரம்)
(70335)

# மரண அறிவித்தல்கள்

## கனகசபை கதிரவேலுப்பிள்ளை
(ஓய்வு பெற்ற யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி)
(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட முன்னாள் யாழ். மாவட்ட நீதிபதி (District Judge) கனகசபை கதிரவேலுப்பிள்ளை அவர்கள் 25-10-99 கனடாவில் காலமானார்.

இவர் சுந்தரேஸ்வரியின் [ஓய்வுபெற்றஆசிரியை, மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்] அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான கனகசபை – கற்பகம் ஆகியோரின் அன்பு மகனும் வேலுப்பிள்ளை – நாகமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும் சந்திரிகா, லோகீசன், ஸ்ரீரஞ்சன், சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை, முருகேசபிள்ளை (முருகன் றேடர்ஸ், கொழும்பு) மற்றும் நாகரெத்தினம், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம். பரராஜசிங்கம் [கொழும்பு றேடர்ஸ், கொழும்பு] மற்றும் சரஸ்வதி [அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி], சகாதேவன் [சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். தொழில் நுட்பக் கல்லூரி], ஆகியோரின் அன்புச் சகோதரரும், சௌந்தரம் [கனடா], பரமேஸ்வரி, காலஞ் சென்ற தில்லையம்பலம் மற்றும் கனகாம்பிகை [இந்தியா], நவசக்தி தேவி, ஜெயராசா [சிரேஷ்ட வருமான வரி உத்தியோகத்தர், வருமான வரித் திணைக்களம், யாழ்ப்பாணம்], சாரதாமணி [ஆசிரியை, மங்கையர்க்கரசி வித்தியாலயம்], மனோன்மணி, இலட்சுமி, பூபாலசுந்தரம் [லண்டன்] ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திரு. திருமதி சகாதேவன் (தம்பி, மைத்துனி),
திரு. திருமதி ஜெயராசா (தங்கை, மைத்துனர்).

64, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். [70381]

## K. S. முத்துவேலு (S. R. D.)
[இளைப்பாறிய கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளர்]

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட க.ச. முத்துவேலு அவர்கள் 26-10-99 அன்று காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் கணவரும் சிறிகாந்தி, மதனகாந்தி, சிறிமணவாளன், இளங்கோ [பிரான்ஸ்] மனுகாந்தி, சிவகாந்தி (பிரான்ஸ்], கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமாஸ்கந்தன், இராஜா, தர்மினி, காலஞ்சென்ற ஜெயந்தி, ஜெகநாதன், செவ்வந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், முரளிதரன், முகுந்தன், இராஜ்மதன், இராஜ்சுதன், வந்தனா, தர்ஷன், மனோஜ், தர்ஷினி, மணாளன், சுதர்ஷினி, சுஜீவன், ஜெயந்தன், ஜெயானந்தன், மதுரன், விதுரன், சங்கவி, விகர்ணன், வியாசவி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், கந்தசாமி, குமாரசாமி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27-10-99 புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. கேதீஸ்வரன்
[மகன்]

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
[A.G A. Office அருகில்] [70363]

## வயிரமுத்து வயித்திலிங்கம்
[இந்திரன் றேடர்ஸ் சங்கானை,
தக்சனா பான்சி இல்லம், யாழ்ப்பாணம்]

சங்கானை அராலி வீதியைச் சேர்ந்த வயிரமுத்து வயித்திலிங்கம் அவர்கள் நேற்று [26-10-1999] செவ்வாய்க்கிழமை காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் மனோராணி, மனோரஞ்சிதம், இந்திரன் [பலாலி ஆசிரிய கலாசாலை, தொழில் நுட்பப் பிரிவு முதலாம் வருடம்], அழகேந்திரன், புகழேந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் தர்மகுலசிங்கம் [N. T. இராசரத்தினம் அன் சன்ஸ்], மனோராசா, ஞானமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சரஸ்வதி, தெய்வேந்திரம், காலஞ்சென்ற நல்லையா மற்றும் திருமதி நவனலட்சுமி ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான N. T. இராசரத்தினம், N T. நடராசா மற்றும் N T. செல்வரத்தினம், திருமதி இரத்தினேஸ்வரி, புஸ்பவதி, இராமச்சந்திரன் (டோகா) ஆகியோரின் மைத்துனரும் வசந்தி, சுகந்தி, ஜசிந்தன், டின்சிகா, தக்சனா, ஆரணியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று 27-10-99 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை கரச்சி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
வ. இந்திரன்
(மகன்)

அராலி வீதி,
சங்கானை. (சி/9534)

### சார்க் உச்சி மாநாட்டின் போது

# இந்திய - பாக். தலைவர்கள் சந்தித்து பேச்சு நடத்துவர்

## இஸ்லாமாபாத் பத்திரிகை தகவல்

இஸ்லாமாபாத், ஒக். 27

அடுத்த மாதம் நேபாளத் தலை நகர் காட்மண்டுவில் நடைபெறவுள்ள சார்க் உச்சி மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பும் சந்தித்து இரு நாட்டு நிலைவரங்கள் குறித்துப் பேச்சு நடத்தக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இஸ்லாமாபாத்தில் இருந்து வெளிவரும் 'ஜங்' என்ற பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது. பாகிஸ்தான் இராணுவஆட்சியாளர்களை மேற்கோள் காட்டி அந்தப்பத்திரிகை மேற்கண்ட செய்தியை வெளியிட்டுள்ளது.

நவம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் மூன்று நாள்களுக்கு சார்க் உச்சி மாநாடு காட்மண்டுவில் நடைபெறும். இதில் கலந்து கொள்ள தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் அனைவரும் காட்மண்டுவில் அடுத்த மாதம் கூட உள்ளனர்.

மாநாட்டில் கலந்து கொள்ளவரும் பிரதமர் வாஜ்பாயும், ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பும் மாநாட்டுக்கு வெளியே தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும்—

இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கென இரு நாட்டுத் தூதரகங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும்—

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு 10 ஆவது சார்க் உச்சி மாநாடு கொழும்பில் நடைபெற்ற போது பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் நவாஸ்ஷெரிப்பும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயும் கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தியாவும் பாகிஸ்



தானும் கடந்த ஆண்டு மே மாதத்தில் அணுகுண்டுப் பரிசோதனைகளை நடத்தியதன் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் முதல் தடவையாக சந்தித்து நடத்திய பேச்சாக அது அமைந்தது.

தற்போதும் அதேபோன்றதொரு பேச்சுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கே பாகிஸ்தான் இராணுவஆட்சியாளர்கள் முயன்று வருவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ-6-9)

### போபர்ஸ் ஊழல் வழக்கு

# ராஜீவ் காந்தியின் பெயரை நீக்க காங்கிரஸ் கோரிக்கை

புதுடில்லி, ஒக்27.

போபர்ஸ் பீரங்கி ஊழல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையில் இருந்து முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பெயர் நீக்கப்படவேண்டும் எனக் காங்கிரஸ் கட்சி கோரி உள்ளது.

நாடாளுமன்றில் மாநிலங்களவைக் கூட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினர் கபில்சிபல் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

1986 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது சுவீடனில் இருந்து ஆயிரத்து 436 கோடி இந்திய ரூபா பெறுமதியான "ஹொவிட்ஸர்" என்ற ரக பீரங்கிகளை போபர்ஸ் நிறுவனத்திடம் இருந்து இந்தியா கொள்வனவு செய்தது.

இந்தக் கொள்வனவுக்காக போபர்ஸ் நிறுவனம் இந்தியத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு 64 கோடி இந்திய ரூபாய்களைலஞ்சமாக வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக விசாரணை நடத்திய மத்திய புலனாய்வுத்துறை [சி.பி.ஐ. அண்மையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது.

அந்தக் குற்றப் பத்திரிகையில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதனை அடுத்து மறைந்த தலைவர் ஒருவரின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதற்காகவே அவரது பெயர் குற்றப் பத்திரிகையில் சேர்க்கப்பட்டுள்ளதாகக் காங்கிரஸ் குற்றம் சாட்டி வருகிறது.

மாநிலங்களவையில் உரையாற்றிய கபில்சிபல் வேண்டுமென்றே குற்றப் பத்திரிகையில் ராஜீவ் காந்தியின் பெயரை அரசாங்கம் சேர்த்துள்ளது. தனது நிலைப்பாட்டை நிரூபிக்க அவர் உயிருடன் இல்லை எனத் தெரிந்தும் அவரது பெயர் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. என்றார்.

அதே சமயம் — நேற்றுக் காலை செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கிரியாவியாஸ் ராஜீவ்காந்தியின் பெயர் குற்றப்பத்திரிகையில் இருந்து நீக்கப்படா விட்டால் தமது கட்சி நாடாளுமன்றைப் பகிஷ்கரிக்கப் போவதாகத் தெரிவித்தார்.

இதேவேளை—

ராஜீவ்காந்தியின் பெயரை குற்றப் பத்திரிகையில் இருந்து நீக்குவதற்கு சட்டப்படி அதிகாரமில்லை என இந்திய அரசாங்கம் நேற்று மக்களவையில் அறிவித்தது. இதனை எதிர்த்து காங்கிரஸ் உறுப்பினர்களும், அ. தி. மு. க உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். (இ-6)

---

## ஆண்டொன்று ஆனது அமரராகி



### கந்தர் முருகன்

( வளர்மதி வீதி, மட்டுவில் தெற்கு )

எங்களுக்காக 24 - 01 - 1918

இறைவனுக்காக 06 - 11 - 1998

ஆண்டொன்றானதையா உம்மழகு வதனங்கண்டு
ஆறாது துயரெங்களாயுளுள்ள வரை
அன்பின் திருவுருவே பண்பின் பிறப்பிடமே
ஆண்டு பலவா னாலும் அரவணைத்த
எங்களன்புத் தெய்வ மதை
போற்றித் துதிப்போமிப்புவியிலிந் நாளில்.

ஆத்ம சாந்திக்காக

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வளர்மதி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(70355)

---

# பாரிஸில் உலகச்சிறுவர் நாடாளுமன்றக் கூட்டம்

## யுனெஸ்கோ ஏற்பாட்டில்

பாரிஸ், ஒக். 27

யுனெஸ்கோ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த உலக சிறுவர் நாடாளுமன்றம் கடந்த ஞாயிறு பாரிஸில் பிரான்ஸின் தேசிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்றது.

உலகெங்கும் இருந்து 348 சிறுவர் சிறுமியர் இந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

அடுத்த நூற்றாண்டை உலகெங்கும் கல்வி ஒளி பரப்பும் நூற்றாண்டாக பிரகடனம் செய்வது என்றும் —

யுத்தங்கள் நடைபெறாத உலகம் ஒன்றைக் கட்டி எழுப்புவதற்கு உறுதி கொள்வதெனவும் —

நாடாளுமன்றில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

உலக வரலாற்றில் முதன் முதல் இடம்பெற்றசிறுவர் நாடாளுமன்றக் கூட்டம் இதுவே. [இ-6]

# இந்தியாவுடனான உறவுகளை வளர்க்கவே அமெ. விரும்புகிறது

## பில் ரிச்சேட்ஸன் தெரிவிப்பு

புதுடில்லி, ஒக். 27

இந்தியாவுடனான உறவுகளை மேலும் வளர்க்கவே அமெரிக்கா விரும்புகின்றது என்று அமெரிக்க எரிசக்தித் துறை அமைச்சர் பில்ரிச்சேட்ஸன் புதுடில்லியில் நேற்றுத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்ரன் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரதுவிஜயத்தின் முன்னேற்பாடக இந்திய அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவென அமெரிக்க எரிசக்தித்துறை அமைச்சர் நேற்று முன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்தார். அங்கு செய்தியாளர்களுடன் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிங்ரனின் விஜயத்தின் போது இரு நாட்டுத் தலைவர்களும் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம், பாகிஸ்தான் நிலைவரம், எரிசக்திப் பரவல் ஆகியன தொடர்பாக பேச்சு நடத்துவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வெளியுறவுத்துறை அமைச்சர், ஜஸ்வந்சிங், மின் சக்தித்துறை அமைச்சர் மற்றும் சுற்றுச் சூழல்துறை அமைச்சர் ஆகியோருடனும் பில்ரிச்சேட்ஸன்பேச்சு நடத்த உள்ளார்.

அமெரிக்கஜனாதிபதி கிளிங்ரன் பிரதமர் வாஜ்பாய்க்கு எழுதிய கடிதம் ஒன்றையும் அவர் வாஜ்பாயிடம் கையளித்தார். (இ-6-9)

---

## பிரார்த்திக்கின்றோம்

எமது குருகுல ஆசிரியரும், நியந்திரி
செயற்குழு உறுப்பினருமாகிய

சமஸ்கிருத பண்டிதர் கி. சதாசிவசர்மா
அவர்களின் அன்புத் தாயார்

### ஸ்ரீமதி இரத்தினம்மா

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சேர் பொன். இராமநாதன், வேதாகம ஆய்வு நிறுவனம்.

[சி/ 9528]

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

### 5-ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை - 99

கோப்பாய் கோட்டத்தில் முதலாவது இடத்தையும் வலய மட்டத்தில் வகை 11 பாடசாலைகளில் முன்னணியில் இடம் பெற்ற பதினொரு மாணவர்களின் விவரம்: —

| | | | |
|---|---|---|---|
| ச. கார்த்திகா | –149 | ச. சத்தியப்பிரியா | –122 |
| செ. பிரபாஜினி | –145 | ஜெ சாளினி | –121 |
| ஸ்ரீ. சிவகஜனி | –139 | ம. கஜன் | –121 |
| வி. சுவேதா | –139 | ச. பிரியா | –120 |
| இ. பகீரதன் | –132 | வி. கிஷோத் | –119 |
| ஐ. ஆதவன் | –132 | | |

சித்தி அடைந்த, வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த அனைத்து மாணவர்களையும் பயிற்றுவித்த சகல ஆசிரியர்களையும் அவர்களை வழி நடத்திய முதல்வர், பிரதி முதல்வர், பகுதித் தலைவர்கள் ஆகியோரையும் அவர்களது பணி மேலும் சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பெற்றோர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(70369)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பான்டெயில், சைனாஜிப்சன் கறண புறாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந. வரதராசா, சரஸ்வதி பாடசாலை அருகில், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (70345)

முதிரை மரத்தில் செய்யப்பட்ட பாவிக்காத யன்னல்கதவின் பிறேம் 4' X 21'' — 10, 5'X21''—7, 6' X 21'' —4, கதவு 6½'' X 26''—1, நிலை 7'X3½'' [வேம்பு[—1 மாலை 2 மணி தொடக்கம் 6 மணி வரை பார்வையிடலாம். தொடர்பு: செ.சந்தி,/சேகரா இல.95, சம்பியன் ஒழுங்கை, கொக்குவில். (70290)

### தவறிவிட்டது

குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சிவலிங்கம் சுதாகர் என்பவரது தேசிய அடையாள அட்டையும் (No:803114056v) விசேட அடையாள அட்டையும் (No: 090301202 3) கவருடன் மினிபஸ்ஸில் பிரயாணமசெய்யும் பொழுது அச்சுவேலியிலிருந்து இருபாலைச் சந்திகுள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் லிங்கம்ஸ் சில்க்ஸ் ஹவுஸ் 18, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (70347)

மாகியப்பிட்டி சண்டிலிப்பாயைச் சேர்ந்த கந்தையா சிவகுமார் என்பவரின் தே அ,அ. (772743610 V) யும், விசேட அடையாள அட்டை (0905013893) யும் 17 ஆம் திகதி உடுவிலுக்கும் மருதனார் மடத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மருதனார் மடம் கௌரி தொலைத்தொடர்பு ஸ்தாபனத்தில் ஒப்படைக்கவும். (70349)

19/1 சுப்பிரமணியம் வீதி, அரியாலையைச் சேர்ந்த செல்லத்துரை கஜிதா என்பவரதுதேசிய அடையாளஅட்டை (இல- 765862370 V) யும், விஷேட அடையாள அட்டை (இல. 0900021460)யும் யாழ் போதனா வைத்தியசாலையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் காவேரி புடைவையகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் (70351)

### மணமகள் தேவை

A/L சித்தியடைந்த நகைத்தொழில் செய்யும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. தொடர்பு: இலவச திருமணசேவை, A கந்தசாமி (ஓய்வுபெற்ற தபாலதிபர்) பிளாக் வீதி, சங்கானை. (7035)

1968 ஆம் ஆண்டு பிறந்த பூரட்டாதி 4 ஆம் கால் நட்சத்திரமுடைய B Sc. (Hons) பட்டதாரி London இல் மேற்படிப்புத் தொடரும் மகனுக்கு London குடியுரிமையுள்ள படித்த அழகான நற்குணமுள்ள பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர் முதல் கடிதத்திலேயே முழுவிவரங்களையும் தெரிவிக்கவும். விள இல.960மே/பாஉதயன். (70278)

### குத்தகைக்கு

நுணாவில் சந்தி பாடசாலைக்கு அருகில் உள்ள சகல வசதிகளும் கொண்ட வீடும் பயன்தரு தென்னை, மா, பலா மரங்களும் கொண்ட 24 பரப்புக் காணியும் குத்தகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: பூபாலசிங்கம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. (70344)

### SPOKEN ENGLISH

சுலபமான முறையில் இலக்கணம் இன்றி ஆங்கிலத்தில் கதைக்கப் பயில (புதிய. மாணவர் பதிவுகள் சனி, ஞாயிறு, புதன், வியாழன் மாலை), ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [70304]

### தேவை

யாழ். நகர சுற்றாடலில் 4 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு அலுவலகப் பாவனைக்கு கொள்வனவு செய்யப்படும். விவரங்களுக்கு 18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (சி/9520)

### உடன் தேவை

10 H P அல்லது 12H P உடைய லிஸ்ரர் என்ஜின் (Air Coolar) உடன் தேவை. நேரிலோ தபாலிலோ தொடர்புகளுக்கு: இல- 17, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் [70352]

### இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் தட்டுப்பாடின்றி தினமும் காலை 7. 00 மணி தொடக்கம் (பாதிக்கோழி உட்பட) சுகாதார முறைப்படி சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை, நுட்பமான நிறுவை சுறுசுறுப்பான சேவை அத்துடன் அடைமுட்டையும் உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு], முத்திரைச் சந்தையடி, நல்லூர். (70103)

## ALL PURPOSE MULTI DIRECTIONAL

# KOBE-52

TV/RADIO ANTENNA

பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

## யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

பருத்தித்துறை

# தரம் 6 அனுமதி - 2000

மேற்படி வகுப்பிற்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பப்படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் 27—10—1999 முதல் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி 1999 — 11 — 25

அதிபர்,
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
பருத்தித்துறை. (70356)

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 24 — 06 — 1924



இறப்பு 27 — 10 — 1987

### அமரர் சண்முகம் வேலாயுதபிள்ளை

(இளைப்பாறிய பொலீஸ் அலுவலர்)

திதி: 13 – 11 – 1999

அறிவின் சுடரொளியாம் குடும்பத்தின் குலவிளக்கு
எங்கள் ஐயாவே கொடிய காலனவன்
தங்கள் இன்னுயிரைத் துப்பாக்கி என்னும்
வேட்டினால் கவர்ந்து சென்ற இத்தினத்தில்
எங்கள் கண்ணீர்ப் பூக்களால்
காணிக்கையாக்குகின்றோம்,

தங்கள் பிரிவை என்றும் நினைவுகூரும்
மனைவி. மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''ரமேஸ்கிரி''
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (70053)

## மங்களகரமான மகிழ்ச்சிகரமான

# ஆரம்பம்

இன்று புதன்கிழமை [27 - 10 - 1999]
பிற்பகல் 3. 00 மணியளவில்

## றோய்

## தொலைத் தொடர்பு சேவை

செப வாசா அல்வாய் வடமேற்கு. அல்வாய்.

குறைந்த கட்டணம்! நிறைந்த சேவை!!
[இரவு பகல் சேவை]

உள்ளூர் வெளியூர் தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள எந் நேரமானாலும் நாடுங்கள்

உள்நாட்டு இல; 070 - 212590.
வெளிநாட்டு இல: 0094 - 70 212590.

அழைப்புக்கள் உரியவர்களுக்கு உடனுக்குடன் பரிமாறப்படும். [70362]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/உரும்பிராய் றோ.க த க. பாடசாலை
உரும்பிராய்

### ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை 1999

| | |
|---|---|
| வாமதேவன் கார்த்திகா | 145 |
| செல்வராசா அர்ச்சனாம்பிகா | 131 |
| இந்திரகுமார் கௌதமி | 127 |
| இராசதுரை யென்டிசா | 119 |

மேற்படி சித்தியடைந்த மாணவர்களையும் வெட்டுப் புள்ளிக்குக் கிட்டிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் இவர்களை அயராது ஊக்குவித்த அதிபர், உப அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி நன்றி கூறுகின்றோம். இப்பணி மேலும் தொடர எமது வாழ்த்துக்கள்!

— பெற்றோர்.

உரும்பிராய். [70366]

# மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மலோஜினி சிவசண்முகநாதன்

திருமதி பத்மலோஜினி சிவசண்முகநாதன் 26-10-99 அன்று சிவபதமடைந்தார். இவர் மக்கள்வங்கி- யா/பல்கலைக்கழகக் கிளையின் உதவி முகாமையாளர் நாகலிங்கம் சிவசண்முகநாதன் அவர்களின் அன்பு மனைவியும் யோகினி சாந்தகுமாரன் (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயாரும் சண்முகம் சாந்தகுமாரன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 27-10-99 அன்று முற்பகல் 10. 00 மணிக்கு ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்
நா. சிவசண்முகநாதன்

நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. [70364]

### கார்த்திகேசு தம்பாப்பிள்ளை சண்முகராசா

முன்னாள் பிரபல காலி வர்த்தகர் கார்த்திகேசு தம்பாப்பிள்ளை சண்முகராசா (கணபதிப்பிள்ளை) காலமானார்.

அன்னார் வேலணை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பில் வசித்து வந்தவரும், வரதலட்சுமியின் அன்புக் கணவரும் வேலாயுதபிள்ளை, பரஞ்சோதி ஆகியோரின் சகோதரரும் வேலணை மேற்கு தாமோதரம்பிள்ளை தில்லையம்மா தம்பதிகளின் மருமகனும் நிர்மலாதேவி (சுவீடன்), தனலட்சுமி, சிவலட்சுமி, கௌரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசிங்கம் (சுவீடன்), விக்கினேஸ்வரன், சிறிநாதன், செந்தமிழ்பாலன் (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயவர்த்தன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று நேற்று (26-10-99) கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கா. த. வேலாயுதபிள்ளை,
[சகோதரன்]
(வேலணை இந்தைவனம்
(சித்திவிநாயகர் தேவஸ்தான
அறங்காவலர்).

வேலணை வடக்கு,
வேலணை– 5 (703359)

# ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு தொடர்பான சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 27

ஆசிரியர் சேவை உள்ளீர்ப்பு விடயம் சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழுவால் சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

1996 டிசம்பர் 31ஆம் திகதியில் ஏற்கனவே வகுப்பு 3 தரம் 2, வகுப்பு 3 தரம் ஒன்று, வகுப்பு 2 தரம் 2 ஆகியவற்றில் உச்சச் சம்பளம் பெறுபவர்கள் 1997 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் அடுத்த தரத்துக்குப் பதவியுயர்த்தப் படுவார்கள்.

தொடர்ந்து 1997 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் அவர்கள் உச்சச் சம்பளத்தைப் பெறுமிடத்து அடுத்த பதவிக்குப் பதவி உயர்த்தப் படுவார்கள்.

இந்த நிலை 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிவரை நடைமுறைக்கு வரும்.

உச்சச் சம்பளம் பெறாத வர்களைப் பொறுத்தவரை அவர்கள் அதற்குத் தேவையான பயிற்சி வகுப்புக்களை முடித்திருத்தல் வேண்டும்.

அதைவிடக் கல்வி அபிவிருத்தி தொடர்பான வேறு தகைமைகளையும் அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

இந்த நடைமுறை வகுப்பு 3 தரம் 2 தொடக்கம் வகுப்பு ஒன்றுவரை பொருத்தமான தாகும்.

வகுப்பு 2 தரம் ஒன்றிலிருந்து வகுப்பு ஒன்றுக்குப் பதவி உயர்வு பெறுவதற்கு ஒருவர் 1996 டிசெம்பர் 31 இல் வகுப்பு 2 தரம் ஒன்றில் உச்சச் சம்பளம் பெற்று 50 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

இவர்களும் 1997 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின் உச்சச் சம்பளம் பெற்று 50 வயதைப் பூர்த்தி செய்யும் போது வகுப்பு ஒன்றுக்கு உயர்த்தப்படுவார்கள்.

இவர்களில் 50 வயதைப் பூர்த்தி செய்யாதவர்கள் குறிப்பிட்ட பயிற்சிகளை முடித்துக் குறிப்பிட்ட புள்ளிகளையும் பெற்று மற்றும் கல்வி அபிவிருத்தி தொடர்பான தகைமைகளையும் பெற்றிருந்தால் அவர்களுக்கும் முதலாம் வகுப்புக்கான பதவி உயர்வு வழங்கப்படும்.

அவர்களுக்காக வைக்கப்படும் பரீட்சைகளில் அவர்கள் சித்திபெறுமிடத்து அவற்றுக்கான புள்ளிகள்வழங்கப்பட்டு அவை அவர்களுடைய சேவைக்காலப் புள்ளிகளுடன் இணைக்கப்பட்டு பதவி உயர்வுக்கு கணிக்கப்படும்.

இந்த நிலைமை 1997 ஜூலை முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்தபோதிலும் இதற்கான சம்பள நிலுவைகள் வழங்கப் படமாட்டா.

இதற்கான கொடுப்பனவுகள் 1999 செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கமே வழங்கப்படும்.

1997 ஜனவரி முதலாம் திகதிக்குப்பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு பதவி உயர்வு அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், தராதரப் பத்திரம் அற்ற ஆசிரியர்கள், உடைய ஆசிரியர்கள் ஆகியோர் நிரந்தர நியமனம் பெற்று சேவையாற்றிய காலத்திலிருந்து இரண்டு வருடத்துக்கு ஒரு புள்ளி வீதம் வழங்கப்பட்டு அவை அவர்களுடைய பதவி உயர்வுக்கு சேர்த்துக்கொள்ளப்படும்.

இது தொடர்பாகப் பதவி உயர்வுக்கு தகுதியான ஆசிரியர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தை நான்கு பிரதிகளில் பூரணப்படுத்தி அவர்களுக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் இந்தசுற்றறிக்கை தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளார்.

இந்த சுற்றறிக்கையை அலுவலக நேரங்களில் 'உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

(இ-9-10-180)

## கிணறு, குளம் புனரமைப்பில் பட்டினிக்கெதிரான நிறுவனம்

வலி. மேற்கு, ஒக். 27

பட்டினிக்கு எதிரான நிறுவனம் அடுத்த ஆண்டு விவசாய வீதிகள், கிணறுகள், குளங்கள் ஆகியவற்றை புனரமைக்கவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை அது ஆரம்பித்துள்ளது.

இந்த நிறுவனம் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

புனரமைக்கப்பட வேண்டிய விவசாய வீதிகள் கிணறுகள், குளங்கள் ஆகியவற்றின் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர்களை அது கேட்டுள்ளது.

(இ-175)

## வயல்களில் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஒக். 27

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக தென்மராட்சிப் பகுதியில்நெல்வயல்களில் வெள்ளம் நிரம்பி வழிவதுடன் நெற் பயிர்கள் குருத்துக் கருகிய நிலையிலும் காணப்படுகின்றன.

இந்த நிலைமையை அடுத்து விவசாயிகள் பயிர்செய்ய முடியாத நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர்.

தனங்கிளப்பு, உசன், மறவன்புலோ, சரசாலை, மந்துவில்; வரணி போன்ற பகுதிகளிலேயே இந்த நிலைமை காணப்படுகின்றது.

(இ-8)

## வாய்க்கால் 'தடை

மானிப்பாய், ஒக். 27

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் பகுதிக்குளத்திற்குச் செல்லும் நீர் வாய்க்கால் தடை ஏற்பட்டதால் மழை வெள்ளம் வீதியோரக் கடைகளுக்குள் புகுந்துள்ளது.

(-90)

## காலாவதியான மருந்து வகைகள்

யாழ்ப்பாணம், ஒக். 27

மந்திகைப் பகுதியிலுள்ள பார்மஸி ஒன்றில் காலாவதியான மருந்து வகைகள் விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட அந்த மருந்தகத்தில் விற்றமின் சி,— டைஜின். மல்ரிவிற்றமின், பூச்சி மருந்து போன்ற மருந்து வகைகளே கைப்பற்றப்பட்டு மேல் நடவடிக்கைக்காக சுகாதாரத் திணைக்களத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உணவு மருந்து பரிசோதகர் ரி.மகாதேவன் தெரிவித்தார்.

(இ-4)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 24 — 09 — 1938

உதிர்வு 27 — 09 — 1999

**திருமதி வள்ளிநாயகி செல்லக்கண்டு**

[ இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை ]

எங்கள் அன்புத் தெய்வமே அம்மா!
எம்மை விட்டு எமனிடம் செல்கையில்
என் மடியில் கிடந்த வண்ணம்
என்னை ஒருகணம் கண்திறந்து பார்த்தீர்களே
அம்மா!
ஆனால் ஒரு வார்த்தையாவது சொல்லவில்லையே
அம்மா!
பொல்லாத கொடிய நோய் வந்ததனால்
எம்மை விட்டு வெகு தூரம் சென்றனையோ?
மறு பிறப்பு என்று ஒன்று இருந்தால்
மறுபடியும் எம்முடன் வந்து சேர்ந்திடு எம்தாயே!

இன்று காலை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்

இளானை,
பொலிகண்டி.

[70314]



## வீட்டுக் கிருத்தியமும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 11 — 09 — 1934

மறைவு 29 09 1999

அமரர்

**வேலாயுதம் கந்தையா**

(இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர்)

29—09—1999 புதன்கிழமை அமரராகிய எமது தலைவர் வே. கந்தையா அவர்களின் அந்தியேட்டியும் வீட்டுக்கிரியைகளும் 29—10—1999 வெள்ளிக்கிழமை அன்னாரது அளவெட்டி இல்லத்தில் நிகழும். அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்துஅவரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு. தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றிச் செல்லுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்றுக்கொள்க. நன்றி.

உங்கள் பிரிவால் துயருறும்
பாசமிகு மனைவி: விக்கினேஸ்வரி கந்தையா
திரு திருமதி விஸ்வநாதன் (மாமா, மாமி)
(ஓய்வு பெற்ற அதிபர்)
மைத்துனர், மருமக்கள், உற்றார், உறவினர்,


பிள்ளையார் வீதிமுகப்பு,
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.

(70109)



## நெஞ்சகலா நினைவஞ்சலி

7 ஆம் ஆண்டு



**கனகரத்தினம் காசிப்பிள்ளை**

தோற்றம்: 25-07-1905 மறைவு: 25-10-1992

முதலாம் ஆண்டு



**காசிப்பிள்ளை கனகம்மா**

தோற்றம்: 07-03-1917 மறைவு: 06-11-1998

எமக்கு நிழல் கொடுத்த தந்தையே, தாயே!
தங்கள் நினைவில் வாடுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

14, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(70353)

## தேவை

யாழ். நகரிலுள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு
இலிகிதர் / காசாளர் தேவை.
உடன் நேரில் வரவும்.
பட்டப்படிப்புகள் கல்லூரி, 57/13, ஸ்ரான்லி வீதி,
(இலங்கைவங்கி முன்பாக),
யாழ்ப்பாணம். (70341)


## சாரணர் ஒன்றுகூடல்

வலிகாமம் தெற்கு, ஒக். 27
காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின ரால் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் சாரணர் தலைவர் குருளைச் சாரணர் தலைவர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெறும்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 10 — 12 — 1924

உதிர்வு 22 — 10 — 1994

### திருமதி பொன்னுத்துரை இரத்தினம்மா

திதி: 27 — 10 — 1999
(திருதியை)

அன்பின் இருப்பிடமாய் பண்பில் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்து எங்களுக்கு அன்பும் அறிவும் ஊட்டி ஆதரித்து வாழவைத்த தெய்வமே! அம்மா! நீங்கள் மறைந்து பல வருடங்கள் சென்றாலும் உங்கள் அன்பு முகம் எம் கண்களில் பிரகாசித்துக்கொண்டே இருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொ. பாலசிங்கம் (மகன்)
(பாலா)
இலங்கை வங்கி,
மாவட்டகாரியாலயம்,
யாழ்ப்பாணம்.

"லக்சுமி வில்லா",
வல்லை வீதி,
சங்கானை. (70346)

## மின்மாற்றி மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 27
குருநகர் சீ—நோர் வலைத் தொழிற்சாலைக்குரிய மின் மாற்றி மீண்டும் பழைய இடத்தில் மின்சாரசபை ஊழியர்களினால் கடந்த சனிக்கிழமை பொருத்தப்பட்டது.

இந்த மின்மாற்றி பொருத்தப்பட்டதைத் தொடர்ந்து சீ—நோர் தொழிற்சாலைக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளதுடன் இந்தத் தொழிற்சாலையை மீண்டும் இயக்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தத் தொழிற்சாலையில் ஏற்கனவே இருந்த 6 இயந்திரங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் வலைகள் செய்வதற்கான நூல்களையும் கொழும்பிலிருந்து தருவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(இ-5)

## துப்பாக்கி வெடித்து இருவர் காயம்

மட்டக்களப்பு ஒக். 27
கல்முனைக்கும் மண்டூருக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் பயணம் செய்த விசேட அதிரடிப் படை வீரர் ஒருவரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததில் குறித்த பஸ்ஸில் பயணம் செய்த பெண் ஒருவர் உட்பட இருவர் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமைமாலை மண்டூர் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

(இ-7-21)

## யா/கோப்பாய் மகாவித்தியாலயம்
## வாழ்த்துகின்றோம்

5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்திபெற்ற எமது பாடசாலை மாணவி
வி. பிறேமளாவையும்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில்
நடத்தப்பட்ட சித்திரப் போட்டியில்
சான்றிதழ்களைப் பெற்ற மாணவர்கள்
தி. யதுர்சன், செ. லோகேஸ்வரன்
ச. பிரதீபன், மி. பி. விமலநாயகி

ஆகியோரையும் இதற்கு உறுதுணையாக நின்று
கற்பித்த ஆசிரியர்களையும்

எல்லாவற்றுக்கும் மேலாக எமக்கு நூலகத்தை
உருவாக்கித் தந்து எமது பாடசாலை வளர்ச்சிக்கு
உறுதுணையாக இருந்துவரும்
வைத்திய கலாநிதி டொன். வை. தியாகராஜா
அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானசப்
பதவி ஏற்றுள்ளமையையும் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(70342) பெற்றோர், பழையமாணவர்கள்.


[இதோ!]

## தீபாவளியை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

சாறிகள், ஸ்கேட் அன் பிளவுஸ், பஞ்சாபி, ரீசேட், சேட், சூட்டிங் மற்றும் பலவண்ண துணி வகைகளை மாபெரும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்!

### சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

அதிரடி மலிவு விலையில்
4 சாறிகள் 950 ரூபாவுக்கு
கையிருப்பு உள்ள வரை மட்டுமே!

## சோதி ரெக்ஸ்ரைல்ஸ்

14, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

பிளவுஸ் பீஸ் வகைகளுக்கும் முகூர்த்தப் பட்டுப் புடைவை, பட்டு வேட்டி மற்றும் காஞ்சிபுரம் போன்றவைகளுக்கும் கைராசியான ஸ்தாபனம்.

சோதி ரெக்ஸ்ரைல்ஸ்.

(சி/9524)


## சாவகச்சேரி நகரசபை
## 2000 ஆம் ஆண்டுக்கான
## ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக்கடைகளுக்கான
# கேள்விகள்

01—01—2000 தொடக்கம் 31—12—2000 வரையிலான காலப் பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம்/சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 12-11-1999 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் அன்றைய தினமே முற்பகல் 11.00 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும்.

| விவரம் | | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புக் கட்டணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக்கடை | என்.எம்.எஸ். | 1 | ரூ. 84,000/- | 1000/- | 500/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | ,, | 2 | ரூ. 96,000/- | 1000/- | 500/- |
| 3. மாட்டிறைச்சிக்கடை | ,, | 3 | ரூ 86,000/- | 1009/- | 500/- |
| 4. மாட்டிறைச்சிக்கடை | ,, | 4 | ரூ 97,000/- | 1000/- | 500/- |

மேற்படி வைப்புப் பணம், கேள்விப் படிவம் கட்டணங்களும் செலுத்துவதன் பேரில் 10—11—1999 ஆம் திகதி 12.30 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப் படமாட்டா.

சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

இது சம்பந்தமான ஏனைய விவரங்கள் இவ்வலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
25—10—1999 (சி/9522)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 26 — 01 — 1929

விண்ணில் 05 — 11 — 1998

### அமரர் சின்னத்தம்பி முருகையா

அன்பின் திருவுருவமாய், பண்பின் உறைவிடமாய்
இருந்த எங்கள் அன்புத்தெய்வமே!
ஓராண்டு சென்றிடினும் மறந்திடுமோ உங்கள்
நினைவலைகள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, உற்றார், உறவினர், நண்பர்கள்.

149/1, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (70348)

# உதயன்

## விளக்கத்தின் வெளிச்சம்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தையோ வேறு எந்த மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தையோ அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாது என நியூயோர்க்கில் நின்று முழங்கியவர் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

அவரது அந்த அறிவிப்பு நாட்டின் அரசியல் வட்டாரங்களிலும் மிகக் குறிப்பாக தமிழர் தரப்புக்களிலும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. அதிருப்தியையும் தோற்றுவித்தது. இந்த விடயம் கடந்த வாரம் நாடாளுமன்றத்திலும் ஒலித்தது.

தமக்கு— தமது கருத்துக்கு— எதிராக வந்த கண்டனங்களுக்குப் பதிலளித்த அமைச்சர், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துக்கும் மூன்றாந் தரப்பு அனுசரணையாளருக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கினார்.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக கொழும்பு அரசுகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பகைமை உணர்வும் பரஸ்பர நம்பிக்கையின்மையும் நிலைகொண்டு விட்டதால், மூன்றாந் தரப்பின் வரையறுக்கப்பட்ட பங்களிப்பு அவசியம் என்பதனை இன்றைய அரசு ஏற்றுக்கொண்டுள்ளதாக அமைச்சர் சொன்னார்.

மூன்றாந் தரப்பு மத்தியஸ்தத்தை அரசாங்கம் நிராகரிப்பதற்கான காரணத்தையும் அவர் வெளியிட்டார்.

மத்தியஸ்தர் என்று வரும்போது, சம்பந்தப்பட்ட தரப்பு தீர்ப்புக் கூறவும், முடிவுகளைச் சொல்லவும் அதிகாரம் உடையதாக இருக்கும். இரண்டு தரப்புகளாலும் ஏற்றுக் கொள்ள முடியாத முடிவுகளை அல்லது சிபார்சுகளை மத்தியஸ்தர் முன்வைக்கும் சாத்தியமும் உண்டு. இருதரப்புகளின் விருப்பத்துக்கும் மாறாக மத்தியஸ்தர் தமக்கு நியாயம் எனக் கருதுவதை ஒரு தீர்வாகத் திணிக்கவும் இயலும். ஒரு நாட்டின் பிரஜைகளான இரு தரப்புகளுக்கு இடையில் உள்ள பிணக்கைத் தீர்ப்பதற்காக, மூன்றாந்தரப்பு ஒன்றின் மத்தியஸ்தத்தை ஏற்றுக்கொள்வது அந்த நாட்டின் இறைமைக்கு நல்லதல்ல — என்றார் கதிர்காமர்.

ஆனால் அனுசரணையாளர் என்பவர் இரண்டு தரப்புகளுக்கும் உதவும் ஒருவராக, அவர்களை பொதுவான ஓர் இடத்தில் பேச வைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கும் பணியைச் செய்பவராக இருப்பார் — என்றும் அமைச்சர் விளக்கினார்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளான சுயநிர்ணய உரிமை, தலையீடற்ற சுயாட்சி உரிமை ஆகியவற்றை வழங்குவதே நீதியான தீர்வாக அமையும் என்று மத்தியஸ்தராக வருபவர் கூறிவிட்டால், என்ன செய்வது என்ற அச்சமே அரசு மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரிப்பதற்குக் காரணம் என்பது இப்போது வெளிச்சமாகிறது.

உரிமை, நியாயம், நீதி கேட்பவர்கள் தமிழர் தரப்பினரே. மத்தியஸ்தராக வருபவர் எப்படியோ அந்த பக்கத்துக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என்ற தரப்பாக மாறுவார். அவரது சிபார்சுகளை ஏற்றுக் கொண்டால் அரசு நினைத்திருப்பதை மட்டுமே வழங்கி திருப்தி கொள்ளச் செய்ய முடியாது என்ற அச்சமும் அரசுக்கு இருக்கலாம்.

மூன்றாந்தரப்பை அரசு நிராகரிப்பதற்கான உண்மைக் காரணங்கள் இவையாகவே இருக்கும் என்று ஊகிக்க இடமுண்டு.

# பின்தங்கிய மக்களின் நன்மை கருதி

# வங்கிசெயற்பாடுகள் கிராமங்களுக்கு!

## இலங்கை வங்கி அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம் ஒக்.27

வங்கிகள் வழங்கும் நன்மைகளை நகரமக்கள் மட்டும் அனுபவிக்காமல் பின் தங்கிய கிராம மக்களும் அனுபவிக்க வேண்டும்என்பதற்காக வங்கிகளின் செயற்பாடுகளை கிராமமட்டத்துக்குகொண்டு வருகிறோம்.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திருமதி இஸபெல் புஸ்பம் இரட்ணதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். நகரில் இயங்கிய இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளை மல்லாகம் சந்தியில் உள்ள கட்டடம் ஒன்றில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்ட வைபவத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

காங்கேசன்துறைக் கிளை முகாமையாளர் சீவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தின் ஆரம்பத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் வங்கிக்கிளையை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பேசுகையில் மேலும் கூறியதாவது: –

இலங்கை வங்கி 60 ஆண்டு காலத்தைப் பூர்த்தி செய்து மக்களின் பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நூறுக்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டு நகர மக்களுக்காக மட்டுமல்லாமல் கிராம மக்களுக்கும் இலங்கை வங்கி பணியாற்றி வருகின்றது. இதன் காரணமாக நகரில் இயங்கிய இந்தக்கிளையை இன்று கிராமத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம்.

21ஆம் நூற்றாண்டில் மக்களுக்கு வங்கி ஆற்றப்போகும் பணிகள் அதன் மூலம் மக்களுக்குக் கிட்டும் நன்மைகள் இந்த மாவட்ட மக்களுக்கும் கிடைக்கும் — என்றார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் பேசுகையில் கூறியதாவது: —

யாழ். நகரில் இயங்கிய இலங்கை வங்கியின் காங்கேசன்துறைக் கிளையை வலி-வடக்கில் இயங்கச் செய்ய கடந்த இரு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி இன்று தான் நிறைவேறியுள்ளது.

மல்லாகத்துக்கு காலடி வைத்துள்ள இந்தக் கிளை விரைவில் காங்கேசன்துறையில் சொந்த இடத்தில் இயங்கும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் ஏற்பட்டுள்ளது — என்றார்.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி ஆசியுரை வழங்குகையில், "கல்வி, பணம் போன்ற செல்வாக்கு இருந்தும் இன்று பயனில்லை. மக்களின் செம்மையான வாழ்க்கைக்கு பிரார்த்தனை தான் அவசியமானது. பிரார்த்தனை மூலமே நிம்மதியைப் பெற முடியும்" — என்றார்.

வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் திருமதி கமலராணி துரைராஜா பேசுகையில் கூறியதாவது:-

மக்களைச் சேமிப்பில் நாட்டம் கொள்ள வைக்கும்நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட வங்கிகள் இன்று மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக கடன்களை வழங்கும் நிலைக்கு முன்னேறியுள்ளன. மக்கள் தமது வாழ்க்கையைச் சிறப்புற அமைக்க வங்கிகள் வழங்கும் வசதிகளை சரிவரப் பயன்படுத்த முன்வர வேண்டும் — என்றார்.

வலி — வடக்குப் பிரஜைகள் குழுத் தலைவர் எஸ். பரமநாதன் பேசுகையில் கூறியதாவது:-

வலி—வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 45 கிராம சேவையாளர்களில் 15 கிராமசேவையாளர்களின் பிரதேசங்களில் மட்டுமே மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளனர். மீளக்குடியமர்ந்த மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வங்கிக் கிளைகளுக்கு நிரந்தர கட்டடம், வங்கிகளில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையை நீக்க வேண்டும்; கணனி வசதிகள் செய்யப்பட வேண்டும்— என்றார்.

வண. பிதா ஞானப்பிரகாசம் அடிகள், பிரம்மஸ்ரீ. நாகேஸ்வரசர்மா, வங்கி வாடிக்கையாளரான எஸ். லங்காபதி உட்படப் பலர் உரையாற்றினர்.

இலங்கைவங்கி வடபிராந்திய முகாமையாளர் க. பாலசுப்பிரமணியம் நன்றியுரை நிகழ்த்தினார். [இ-3]

## கண்காட்சியும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக். 27

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் கல்விக் கண்காட்சி, நூலகக் கண்காட்சி. சிறுவர் விளையாட்டு முற்றத் திறப்புவிழா ஆகியன நாளை வியாழக்கிழமை காலை 10மணி முதல் நடைபெறவிருக்கின்றன.

வித்தியாலய அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோ. மகேந்திரன் கல்விக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார்.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளும் பாடசாலையின் ஓய்வு பெற்ற ஆசிரியர் க. செல்லத்துரை. மூத்த ஆசிரியை திருமதி செல்வராசா ஆகியோர் நூலகக் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதுடன் சிறுவர் விளையாட்டு முற்றத்தைத் திறந்து வைப்பர்.

[க]

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

# குடாநாட்டு பாடசாலைகள் சிலவற்றின் முடிவுகள்

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகி இருந்தன.

இந்தப் பரீட்சையில் குடாநாட்டுப் பாடசாலைகளில் கூடியபுள்ளிகள் பெற்ற முதல் மூன்று மாணவர்களின் விவரங்கள் கடந்த திங்கள் உதயனில் வெளியாகி இருந்தன. மற்றும் ஒரு தொகுதி மாணவர்களின் விவரங்களும் அவர்கள் பெற்ற புள்ளிகளும் வருமாறு:

★ இணுவில் மத்திய கல்லூரி:-
ரா. நவசக்தியா – 154. ச ஜெனிசா — 149, நா. துஸ்யந்தி —147

★ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை:-
ஜே. காயத்திரி—146 எஸ். ஆதித்தன்—140, கே. பிரதீபன் —140

★ ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை:-
மா. யூட்டெனிக்ஸ் —155, ம. விஜபாலயன்—125, சி. கரோஜன்—118

★ இணுவில் இந்துக்கல்லூரி:-
கி டல்சினி—158, க. மாதங்கி —152, ம. கபிலன்—144

★ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்:-
க கிரிசாந்தி—151, கே. ஜோசிதா—149, சி. சுஜித்தா —137 [சித்தியடைந்தோர் -05)

★ பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்:-
கு சொரூபிகா—142, வெர்வராஹி—139 ந. மதனிகா—135(சித்திபடைந்தோர் - 10)

★ மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம்:-
வி. சங்கிதா—150, கே. மயூரி —136. எஸ் துவாரகன்—133 [சித்தியடைந்தோர் -5]

★ கல்வியன்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை:-
உ. தமோனுதன்—167, த. துவாரகா—160. சி. சிவரஞ்சினி—159 [தோற்றியோர்-35, சித்தியடைந்தோர் -10)

★ திருநெல்வேலி றோ.க. த.க. பாடசாலை:-
த கவிதா—137, க. அசோக் —120, ம. மக்ஷன் அசோக் —119

(இ-க-28)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஒக்ரோபர் மாத இதழின் வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்

சஞ்சிகையை கிராமசேவை அலுவலர் சி. சிவபாலசிங்கம் வெளியிட்டு வைப்பார். செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் மதிப்பீட்டுரையினை நிகழ்த்துவார்.

[க-173]

## பதவி யேற்பு

சுன்னாகம் றோட்டாக்ட் கழகத்தின் ஐந்தாவது பதவியேற்பு வைபவம் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குநடைபெறும்.

புதிய தலைவராக கே. பிரதீபன் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்படுவார்.

யாழ்ப்பாணம் றொட்றிக் கழகத் தலைவர் கே. சிறீபதி இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(க – 125)

# அனுசரணையாளர் பங்களிப்பு தீர்வுக்கு ஏன் அவசியமானது?

கொழும்பு, ஒக். 27

சரியான தருணத்தில் தகுந்த அனுசரணையாளரின் பங்களிப்புடனான பேச்சுவார்த்தையை அரசாங்கம் என்றுமே நிராகரித்தது கிடையாது. ஆனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது அவசியமற்ற ஒன்று மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஒரு தரப்பு மீது நிர்ப்பந்தத்தை செலுத்தலாம்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கடந்த புதன் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடு கடத்தல் திருத்தச் சட்ட மூலம் பற்றிய விவாதத்தில கலந்து கொண்டு உரையாற்றிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரிப்பதனால் நாம் பேச்சுவார்த்தைக்கு எதிரானவர்கள் என்பதுபொருள் அல்ல.

இறைமையுள்ள ஒரு நாட்டில், அதிலும் யுத்த சூழல நிலவுகின்ற வேளையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் திருப்திகரமாகஅமையுமெனக் கருதுவதற்கு இடமில்லை. விடுதலைப் புலிகளும் இதனை நன்கு அறிவார்கள்.

மத்தியஸ்தம் வகிப்பவர் சில சமயங்களில் தனது பரிந்துரைகளை ஏற்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை வற்புறுத்தலாம் இது சில சமயங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். பரிந்துரைகள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் நிராகரிக்கப்படவும் கூடும்.

மறு வகையில் அனுசரணையாளரின் செயற்பாடுகள் இருதரப்பினர் மத்தியிலும் உள்ள அபிப்பிராய வேறுபாடுகளை நீக்குவதுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கான ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதாக மட்டும் அமையும். எந்தவித திணிப்புக்கும் இங்கு இடமில்லை.

இதன் காரணமாகவே நாம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரிக்கின்ற அதேவேளையில் அனுசரணையாளரின் பங்களிப்பை வரவேற்கின்றோம்.

சரியான அனுசரணையாளர் யார், சரியான நேரம் எது என்பதனை அரசாங்கமே முடிவு செய்யும்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட மத்தியஸ்தர், அனுசரணையாளர் என்பவர்களுக்கிடையிலான முக்கியத்துவ வேறுபாட்டை சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற வெளிநாட்டு முதலீட்டாளர்களுடனான சந்திப்பில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார் — என்றார்.

(இ-ம)

## நாளை

ஐப்பசி 11

வியாழக்கிழமை

திதி: சதுர்த்தி

மாலை: 06.36 வரை.

நட்சத்திரம்: ரோகிணி

முற்பகல் 9.52 வரை.

சங்கடஹரசதுர்த்திவிரதம்

சுபநேரம்: 7.33 9.03

ராகுகாலம்: 1 33 - 3.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சந்தேகத்தைப் போல விரைவிலே வளரும் விஷ விருட்சம் வேறு இல்லை.

- காண்டேகர்

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளிவருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் [இம் மாதம் 20 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

பருத்தித்துறை
(தொடர்)

[118857பி], [118957ஏ], [119012ஏ], [119012பி], [119012சி], [119086ஏ]. (120013ஏ), (120013பி), (120013சி), (120013டி), (120176ஏ), (120176பி), (120242ஏ), (121929ஏ), (121929பி), (121929சி), (121983ஏ), (121983பி), (121992ஏ), (122043ஏ), (122043பி), (122075ஏ). (122075பி), (122090ஏ), (122092ஏ), (122107ஏ), (122221ஏ),

சண்டிலிப்பாய்

(117049ஏ), (117221ஏ), (117221பி), (118285ஏ), (118285பி), (118286ஏ), (118406ஏ), (119224ஏ). (119224பி), (121508ஏ), (121508பி], [121508சி), (121574ஏ), [121574பி], [121644ஏ], [121644பி], [122644சி[, [121692ஏ[, [121740ஏ], [121755ஏ[, [121760ஏ], [121763ஏ], [121323ஏ], [123393ஏ], [123394ஏ[, [123394பி[, [123394சி], [123394டி]. 123402ஏ], [123403ஏ], [123418ஏ], [123460ஏ].

தெல்லிப்பழை

[121031ஏ], [117388ஏ], [119267ஏ], [119308ஏ], [121513ஏ], [121569ஏ], [121569பி], [121569சி], [121569டி], [121569ஈ], [121569எவ்], [121569ஜி], (121597ஏ), (121649ஏ), (121813ஏ), (121853ஏ), (123384ஏ), (123528ஏ), (123528பி):

உடுவில்

[110468ஏ], [116815ஏ], [121028ஏ), [121035ஏ], 121047ஏ], (121047பி], [121053ஏ], [121053பி], [121053சி] [121053டி], [121085ஏ] (121085பி]. (121224ஏ], [121224பி), [21224சி], (121228ஏ), [121231 ஏ], (121231 பி), [121232 ஏ], [121234 ஏ], [121234 பி], (121236 ஏ), [121236 பி], [121 240 ஏ[, [121240 பி], (121242 ஏ], (121242 பி[, (121245 ஏ), [121253 ஏ[, [121253 பி), [123181 ஏ[, [123215 ஏ), [123215 பி], [119440 ஏ]. [119440 பி), [119440 சி[, [119440 டி], [119440 ஈ], [121510 ஏ[, [121510 பி], (121510 சி[, [121510 டி], [121510 ஈ), [121534 ஏ[, [121 534பி], (121534சி), (121535ஏ), (121619ஏ), (121655ஏ], (121661ஏ), (121661பி), (121687ஏ), (121687பி), (121706ஏ), (121742ஏ), (121764ஏ], (121764பி], [121797ஏ], [121810ஏ), (121810பி), (121810சி), (121855ஏ], [121858ஏ[, (123346ஏ), [123354ஏ], [123354பி), [123356ஏ[, (123365ஏ), (123370ஏ), (123376ஏ), (123420ஏ), (123420பி), (123420சி), (123420டி), (123437ஏ), (123437பி), (123437சி[,

வேலணை

(12017ஏ), (12153ஏ), (12172ஏ), (12209ஏ),

பயண அனுமதி வழங்கப்பட்டோரின் (இம் மாதம் 23 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு--

சாவகச்சேரி

[109939ஏ], [105544ஏ], [108477ஏ], [108477பி[, [108489ஏ], [108545ஏ], [108545பி], [110554ஏ], [110608ஏ[, [11608பி], [110625ஏ], [110625பி], [110625சி[, [110654பி[, [110658ஏ], [110658பி], [110658சி[, [110672ஏ[. [110689ஏ], [114383ஏ], [114397ஏ], [114397பி], [114399ஏ], [114399பி[, [114403ஏ], [114403பி], [114403சி], [114407ஏ], [114407பி), [114411ஏ], [114411பி], [114422ஏ], [114424ஏ], [114424பி], [114429ஏ], [114430ஏ], [114430பி[, [114430சி], [114430டி], [114434ஏ], [114434பி], [114437ஏ], [114440ஏ], [114440பி], [114440சி], [114446ஏ[, [114447ஏ], [114449ஏ[, [114452ஏ], [114453ஏ], [114453பி], [114454ஏ], [114454பி], [114454சி], [114454டி], [114457ஏ], [114466ஏ], [114477ஏ[, [114477பி], [114477சி], [114478ஏ], [116487ஏ], 114487பி], [114487சி], [114487டி], [114527ஏ], [114527பி], [114527சி], [114527டி] [114527ஈ[, [115750ஏ], [115771ஏ], [118625ஏ], [118625பி], [118625சி], (118635ஏ), (118635பி), (118635சி), (118635டி), (118635ஈ), (118672ஏ), (118672பி), (120243ஏ), (120779ஏ), (120836ஏ), (120836பி), (120736சி), (120836டி), (120836ஈ), (120866ஏ), (120896ஏ), 120898ஏ). [120899 ஏ], [120900ஏ], [120900பி], [120904 [ஏ], [120928 ஏ], [120934 ஏ], [120939 ஏ], [120939 பி[, [120945 ஏ], [120945 பி[, [120945 சி], [120946 ஏ], [120948 ஏ] [120955 ஏ], [120955 பி]: [120957 ஏ], [120957பி], [120964 ஏ], [120967 ஏ], [120968 ஏ[, [120968 பி], [120970 ஏ[, [120973 ஏ], [120973 பி], [123241 ஏ[, [123241 பி], [123255 ஏ], [123257 ஏ], [123259 ஏ[; (123264ஏ), (123265ஏ), (123265பி),, (107668ஏ), (107668சி), (107668டி), (107855ஏ), (120996ஏ), (120996பி). (120998ஏ), (120998பி), (120998சி), (121018 ஏ), (107668பி),

நெடுந்தீவு

(11974ஏ), (11974பி), (11974சி), (12125ஏ,) (12125பி), (12174ஏ), (12178ஏ), (12178பி), (12185ஏ), (12215ஏ), (12215).

கரவெட்டி

(072484ஏ), (072484பி), (072484சி), (072484டி), (098304ஏ), (100911ஏ), (102858ஏ). (102858பி), (102858சி), (102858டி), (106791ஏ), (108115ஏ), (108235ஏ), (108235பி), (113618ஏ), (113737ஏ), (113737பி), (118794ஏ), (118794பி), (118855ஏ), (118939ஏ), (118962ஏ), (118962பி), (118980ஏ), (118980பி), (118995ஏ), (119109ஏ), (119109பி), (119125ஏ). [119126ஏ], [119126பி], [119136ஏ], [119144ஏ], [119784ஏ], [119784பி], [119784சி], [119928ஏ[, [119928பி[, [120076ஏ], [121993ஏ], [121995ஏ], [121995பி], [122177ஏ], [122177பி], [122344ஏ[ [199172ஏ].

ஊர்காவற்றுறை

[10823ஏ], [11815ஏ], [11815பி], [12001ஏ], [12015ஏ], [12015பி], (12051ஏ), [12051பி], [12167ஏ], [12167பி], [12170ஏ], [12176ஏ], [12176பி], [12177ஏ[, [12223ஏ], [12223பி], [12226ஏ], [12227ஏ]. [12227பி], [12227சி], [12228ஏ], [12228பி], [12229ஏ], [12230ஏ], [12231ஏ], [12342ஏ], [12346ஏ], [12346பி], [12347ஏ], [12353ஏ], [12353பி], [12355ஏ], [12355பி], [12355சி], [12361ஏ], [12363ஏ[.

(தொடரும்)


## கண்ணீர் அஞ்சலி

### கனகசபை கதிரைவேற்பிள்ளை

(ஓய்வு பெற்ற நீதிவான், கனடா)
எமது கல்லூரி அதிபர்
திருமதி சரஸ்வதி ஜெயராசா
அவர்களின் சகோதரர்
க. கதிரைவேற்பிள்ளை

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரது துயரில் பங்கு கொள்வதோடு, அவரது ஆத்மசாந்திக்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலக பணியாளர்கள்.

யா / இந்துமகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம். (70360)


## தேடுதல்

கடந்த 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நீர்வேலியில் உள்ள கரந்தன், போயிட்டி, மாலை போன்ற இடங்கள் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது குறிப்பிட்ட இடங்களைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகள் மற்றும் முதியவர்கள் உட்பட வீதியால் சென்றவர்களும் ஊரெழு அம்மன் கோயிலடிக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

அங்கு கூட்டிச் செல்லப்பட்ட அனைவரும் விசாரணையின் பின்பு வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(இ-ம-10)


## மனமாரப் பாராட்டுகின்றோம்

யா/ வல்வெட்டி
இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
ஐந்தாந்தரப் புலமைப் பரிசில்
பரீட்சை - 1999

ஐந்தாந்தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்த மாணவன்

**தருமகுலசிங்கம் சுகந்தன் (135 புள்ளிகள்)**

அவர்களையும் சித்தியடைய வழிகாட்டிய ஆசிரியர்களையும் நெறிப்படுத்திய அதிபர் அவர்களையும் மனமாரப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அம்சன் ஒளியக நண்பர்கள்

பிரதான வீதி,
நெல்லியடி.
கரவெட்டி. [சி/9527]



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### புலமைப் பரிசில் - 1999

இந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் போட்டித் தேர்வில் சித்தியெய்திய எமது கிராம மாணவ மாணவியரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | மாணவர் பெயர் | பெற்ற புள்ளிகள் | பாடசாலை |
|---|---|---|---|
| 1. | சயனுதா | 163 | பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை |
| 2. | வசீகரன் | 147 | யாழ்ப்பாணக் கல்லூரி |
| 3. | ஹேமச்சந்திரா | 143 | யாழ்ப்பாணக் கல்லூரி |
| 4. | கோபாலகிருஷ்ணன் | 136 | பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை |
| 5. | புரோஜினி | 129 | பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை |
| 6. | கிருஷ்ணகாந்தன் | 126 | மெய்கண்டான் வித்தியாசாலை |
| 7. | விக்கினேஸ்வரி | 124 | பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை |

கற்பகசோலை கிராம முன்னேற்றச் சங்கம்,
கற்பகசோலை மாதர் கிராம முன்னேற்றச் சங்கம்,
பிளவத்தை சனசமூக நிலையம்,
பிளவத்தை நன்மை விருத்திச் சங்கம். (சி/9525)



தென்புலோலி மந்திகை

## கண்ணகை அம்மன் கோயில்

மணவாளக் கோல சங்காபிஷேகமும்
ஏகதினலட்ச நாம அர்ச்சனையும்

### விசேட ஹோம விஞ்ஞாபனம்

நாளை வியாழக்கிழமை (28 – 10 – 99) காலை 10.00 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து இலட்ச நாம அர்ச்சனையும் விஷேட ஹோமமும் நடைபெறும்.

விழாக்குரு: சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள்
[தென்புலோலி காந்தியூர் கண்ணகை அம்மன் கோயில் பிரதம குரு]

சிவஸ்ரீ கு. க. சோமசேகரக் குருக்கள்
[ஆலய அர்ச்சகரும் பிரதம குருவும்]

★ அர்ச்சனைக்கான டிக்கட்டுக்களை ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(70357)

## வாழ்த்துகின்றோம்

எமது செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர்

**திரு. எஸ். ஆர். ஜெயப்பிரகாசம்**

அவர்களும்

அண்மையில் ஓய்வுபெற்ற பதவி நிலை உத்தியோகத்தர்

**திரு. வ. தேவேந்திரன்**

அவர்களும்

நீதி அமைச்சினால் சமாதான நீதிவான்களாக நியமிக்கப்பட்டதைப் பாராட்டி அவர்கள் மேலும் பல சிறப்புக்கள் பெற்று நீடு வாழ வாழ்த்துகின்றோம்.

நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம்
வலிகாமம் தெற்கு, உடுவில். (70376)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

செல்வி மனுகாந்தி முத்துவேலு

அவர்களின் அன்புத் தந்தையார்

**K. S. முத்துவேலு (S R D)**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சபை.

யா/நீர்வேலி சி. சி. த. க. பாடசாலை. (70378)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிப்பிள்ளை சின்னத்துரை

குரும்பசிட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை சின்னத்துரை 26-10-99 அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-10-99) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. நாகசிவாயம்

...றுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி. (70354)

### தர்மலிங்கம் நடராசா

ஈச்சமோட்டையை சேர்ந்த தர்மலிங்கம் நடராசா அவர்கள் நேற்று (26-10-99) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும் தர்மலிங்கம், சரஸ்வதி, கனகலிங்கம், இராஜேஸ்வரி, தர்மபாலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற இராசதுரை, மகேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி, செல்வராணி, காலஞ்சென்ற குலரெட்ணம் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-10-99) புதன்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம்
(மகன்)

ஈச்சமோட்டை. ((70377)

### வே. தெட்சணாமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியர் G. T. M S. சுவினை)

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட வே. தெட்சணாமூர்த்தி அவர்கள் 25—10—99 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. வேலுத்தம்பியின் இளைய மகனும், மல்லாகம் பங்களா ஒழுங்கை திரு. திருமதி. அ. த. அருணாசலம் பிள்ளை (கச்சாய்) அவர்களின் மருமகனும், பரமேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை, திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சுன்னாகம்) அவர்களின் பாசமிகு கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27-10-99) கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. உதயணன் (மருமகன்)
426/11-1/5 யஸ்மின் தொடர்மாடி,
சிறில் சி பெரேரா மாவத்தை
கொழும்பு-13 T. P. 01-441680

(சி/9523)

## விவசாய பீட மாணவர் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்கள் தமது அத்தியாவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று முதல் விரிவுரைகளை பகிஷ்கரிக்கத் தொடங்கியுள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரைக்கும் பகிஷ்கரிப்புத் தொடரும் எனவும் விவசாய பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. [ஐ-7]

## காரைநகரில் பருவச்சீட்டு விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக் 27

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலையில் பாடசாலை மாணவர்களுக்கு பருவச்சீட்டு வழங்கும் பணியை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாக வுள்ளதாக சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் அடுத்த மாதத்துக்குரிய பருவச் சீட்டுக்களை அன்றைய தினம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-7)

## கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஒக். 27

கல்வியங்காடு நொதேண் விளையாட்டுக் கழகம் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் 12 ஓவர்கள் கொண்ட 'பரா' வெற்றிக் கேடயத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் செங்குந்தா இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் அணியை எதிர்த்துக் கலைமகள் வி. க. அணி விளையாடும். [ஐ-4]

## யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.27

மிட்சுஜி — ஜெசிபா வெற்றிக் கிண்ணக்கிரிக்கெட்போட்டிகள் விரைவில் ஆரம்பமாக இருப்பதால் யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தெரிவுக் குழுக் கூட்டம் இன்று புதன் மாலை 4 மணிக்கும்— நிர்வாக சபைக் கூட்டம் மாலை 5 மணிக்கும் —யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள கிரிக்கெட் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி குழுக்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களைத் தவறாது சமூகம் அளிக்குமாறு கிரிக்கெட் சங்கத் தலைவர் கேட்டுள்ளார்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 27

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் 18 வயதுப் பிரிவினரிற்கான அரையிறுதிப் போட்டிகள் இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மானிப்பாய் இந்து எதிர் சண்டிலிப்பாய் இந்து

★ யூனியன் கல்லூரி எதிர் வசாவிளான் ம.ம.வி..

[ஐ-4-86]

★ ★ ★

நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 5.00 மணிக்கு இடம் பெறும்ஆட்டத்தில்அரியாலை ஐக்கிய வி. க. அணியும் சென்மேரிஸ் வி.க.அணியும் மோதுகின்றன. [ஐ-4]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நல்லூர்

சென் பெனடிக்ற் றோ.க.த.க. பாடசாலையில்

1999 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விவரம்

| | | |
|---|---|---|
| க. பவித்திரா | — | 151 |
| செ. துவாரகா | — | 131 |
| க. நிசாந்த் | — | 124 |
| ஜீ. அஜந்தாயினி | — | 122 |
| பா. கிருசாந்தி | — | 121 |
| இ. சலஜா | — | 121 |

மேலும் 100 ற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டுவதோடு இவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உரமூட்டிய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை
அபிவிருத்திச் சங்கத்தினர்,
பெற்றோர்கள்.

(70383)

## கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய முன்னாள் யாழ். மாவட்ட நீதிபதி

உயர்திரு.

**கனகசபை கதிரவேலுப்பிள்ளை**

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டுவேதனை அடைகிறோம்.

அவரது மறைவினால் துயருற்று இருக்கும் அவரதுகுடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலாபூசணம் ஆ. ஜீவரட்ணம்
குடும்பத்தினர்

காளிகோயிலடி,
திருநெல்வேலி மேற்கு. (சி/9535)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



மாவை

**அமரர் மரியான் கிருஷ்ணன்**

(காங்கேசன்-சி கூ. தாபன கிளேக்கட்டர் இயக்குநர்)

மலர்வு: 08-05-1927
உதிர்வு: 26-09-1999

ஆசை மண்ணும் ஆலயமும்
இதயம் நிறைந்த இல்லிடமும்
இழந்து நின்றபோது... நாம்
உண்ணும் உணவுக்கு ஏங்காமல்
உடுக்கும் ஆடைக்கு அலையாமல்
''இல்வாழ்வான் என்பானின்''
இயல்புணர்ந்த இனியவரே - தந்தையே!
தேடித் தேடி மக்கள் அழ
தேடிய மனையாள் சோர்ந்து விழ
வாடி வதங்கி உற்றார் அழ
ஓடிய விந்தை உரையாயோ?
விதியின் விளைவென்றவா...
உன்னுயிர் போல் மன்னுயிர் போற்றிய
மன்னா! மனித மாமணியே!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குறிப்பு: இன்று (27-10-99) எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு வேண்டி நிற்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.
உற்றார், உறவினர்கள்.

பாடசாலை வீதி,
மல்லாகம். (70372)

**வட...**

[முதலாம் பக்கத் தொடர்]
அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும். தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக நிர்வாக அதிகாரிகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அதன் பின்னரே நியமனப் பத்திரங்களை ஏற்பதற்கான திகதியை நிர்ணயிப்பது என்று முடிவெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை --

வடக்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் தேர்தல் தொகுதிகளுக்கான வாக்களிப்பு நிலையங்களை மன்னாரிலும் வவுனியாவிலும் அமைப்பதற்கு ஆலோசிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

முஸ்லிம்களின் புனித றம்ழான் பண்டிகை மாதத்தில் தேர்தலை நடத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தேர்தல் திணைக்கள வட்டாரங்களை ஆதாரங்காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

பெரும்பாலும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்குப் பின்னரே தேர்தலுக்கான திகதி தீர்மானிக்கப்படும் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

புனித றம்ழான் மாதத்தில் தேர்தலை நடத்த வேண்டாம் என்று முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தேர்தல் ஆணையாளரிடம் கோரியிருந்தமை தெரிந்ததே.

[ஐ-3-7]

**கூட்டணியின்...**

(முதலாம் பக்கத் தொடர்)
கிய பங்கு வகித்தார்.

1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி. கிளர்ச்சி இடம்பெற்ற காலத்தில் ஒருமுறை கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டார்.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய இவர் பல சமூக அபிவிருத்தித் திட்டங்களை முன்னின்று செயற்படுத்தியவர்.

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீபாஸ்கரன் மல்லாகத்தில் வசித்து வந்தார். (ஐ-3)

# புலிகளின் ஷெல் வீச்சில் சிப்பாய் பலி!

மன்னார் மாவட்டத்தில் பாலம்பிட்டியில் அமைந்துள்ள முன்னரங்க நிலைகள் மீது நேற்று முன்தினம் இரவு 11-45 மணியளவில் விடுதலைப் புலிகள் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் —

படையினர் நால்வர் காயமடைந்தனர் என்றும் —

தெரிவிக்கப்பட்டது.

[ஐ-12-3]

**ஐக்கிய...**

(முதலாம் பக்கத்தொடர்)
கப்பட்டுள்ளது.

'இலங்கையில் தமிழீழம் அமையுமானால் அதையிட்டு மகிழ்ச்சி அடைவோம்' என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி அண்மையில் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தார்

இக் கருத்துத் தொடர்பாக இந்தியாவில் உள்ள இலங்கைக்கான தூதுவர் கடந்த 20 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார். அச்சமயமே இந்தியாவின் இந்த நிலைப்பாடு குறித்து தெரிவிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பான இந்தியக் கொள்கையில் மாற்றம் இல்லை என்றும் —

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை தொடர்ந்து நடைமுறையில் உள்ளது என்றும் —

உறுதி அளிக்கப்பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஐ-3-21]

**அநாவசியமான...**

[முதலாம் பக்கத் தொடர்]
வடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஜனாதிபதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து ஜனாதிபதி தலைமையில் தொல்லைத் தவிர்ப்புக் குழு விரைவில் கூடும் என்றும் —

அந்தக் கூட்டத்தில் முப்படைத் தளபதிகள் மற்றும் பொலீஸ் மா அதிபர் முன்னிலையில் இது தொடர்பாக ஆராய்வது என்றும் —

அங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது (ஐ-3)

**சந்திரிகாவுக்கு..**

(முதலாம் பக்கத் தொடர்)
முயற்சிகளுக்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கவில்லை. அதன் காரணமாக இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்காகத் தேர்தல் நடத்தப்படுகின்றது என்று ஜனாதிபதி அங்கு கூறினார்.

இந்தக் கூட்டத்தை அடுத்து உள்ளூராட்சி சபை மாகாண சபை ஆகியவற்றின் தலைவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடினார்.

(க-3-6)

**புலிகளின்...**

[முதலாம் பக்கத் தொடர்[
''கேரதீவில் கரை ஒதுங்கியவை பொது மக்களின் சடலங்களா?'' என்ற தலைப்பில் கடந்த 23 ஆம் திகதி சஞ்சீவியில் வெளியான செய்தி தொடர்பாக அளித்த விளக்கத்திலேயே இராணுவத் தரப்பு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. (ஐ-3)

# பாடசாலைத் தோட்டம்

வலிகாமம் தெற்கு, ஒக். 27

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பாடசாலைத் தோட்டம் வெற்றி அளித்திருப்பதாகத் தெரியவருகின்றது. கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட தோட்டத்தில் இருந்து கத்தரி போன்ற நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. நல்ல இன நாற்றுக்கன்றுகளைத் தினமும் பல தோட்டக்காரர்கள் பாடசாலையில் வந்து பெற்றுச் செல்கின்றனர் (இ52-1)

**மாணவனை...**

(முதலாம் பக்கத் தொடர்)
வலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரஸ்தாப மாணவனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி எஸ். சிறீதரன் நேற்றுப் பார்வையிட்டார். (ஐ-3-4-9)

**ஆனையிறவில்...**

(முதலாம் பக்கத் தொடர்)
25) என்பவரே மரணமான வராவார்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவானின் பணிப்பின் பேரில் சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரா விசாரணை நடத்தி சடலத்தை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்த பின்னர் உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-117)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்
திரு நா. சிவசண்முகநாதன்
அவர்களது துணைவியார்

**திருமதி பத்மலோஜினி சிவசண்முகநாதன்**

அவர்களின் திடீர் மறைவையிட்டு பெரும் அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்,
மக்கள் வங்கி,
யாழ். பல்கலைக்கழக கிளை.

[70370]



## மரண அறிவித்தல்

**திருமதி கதிரவேலு இராசமணி**

திருமதி கதிரவேலு இராசமணி 26-10-99 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் சிவப்பிரகாசம் (அஜித் வேர்க் சொப்), சிவராஜா (கட்டட ஒப்பந்தக் காரர்), சிவசுப்பிரமணியம் (செல்வம்—செல்வம் மோட்டோர்ஸ்), சிவனேஸ்வரன் (இத்தாலி), ஜெகதீஸ்வரன் (இத்தாலி), விக்கினேஸ்வரன் (கொழும்பு), விக்கினேஸ்வரி (கனடா), புவனேஸ்வரி (கொழும்பு). நகுலேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவபாக்கியம், இராஜேஸ்வரி, சூரியகுமாரி (ரதி), ராஜவதனி (இத்தாலி), நாகநந்தினி (இத்தாலி), விஜிதா (கொழும்பு), நிர்மலேந்திரன் (கனடா), ஜெயசீலன் (கொழும்பு), ஜசிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவகுமார் (லண்டன்), சுமதி, சுபாஜினி, சிந்துஜன், அஜித், ரேணுகா, பிரசாத், ராதிகா, நீகன், விதுனன, வினோத், வைஸ்ணபி, யாழினியன், விதூஷன், கௌஷல் (இத்தாலி), ஜெருஷன் (இத்தாலி), துர்க்கா (இத்தாலி), டெனிஸ் (கொழும்பு), ஜெனனி (கொழும்பு), நிக்ஷன் (கனடா), நிஷான் (கனடா), நிருபன் (கனடா), இலக்கியா (கொழும்பு), இலக்ஷியா (கொழும்பு), தேவராசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லுக்ஷன், உஷா, அபர்னா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [27-10-99] புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. சிவப்பிரகாசம், க. சிவராஜா,
க. சிவசுப்பிரமணியம் (செல்வம்)
[மகன்மார்]

கனகசபை வீதி,
மானிப்பாய்.

[70380]



## மீள் பரீட்சை

எமது நிறுவனத்தின்
99 ஆம் கல்வியாண்டில்
**Diploma in Microsoft Office**

பரீட்சை எடுக்கத் தவறிய மாணவர்களின் நலன் கருதியும் பரீட்சைப் பெறுபேறு தவறிய மாணவர்களின் நலன் கருதியும் மீள் பரீட்சையொன்று நவம்பர் முதலாம் வாரத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. பரீட்சை எடுக்க விரும்புவோர் 31-10-99 இற்கு முன் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்யவும்.

இயக்குநர்
IIS

(சி/9533)



உ
சிவமயம்

## தீபாவளி மலிவு விற்பனை

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
தீபாவளித் திருநாளை முன்னிட்டு
**மாபெரும் மலிவு விற்பனையை**
ஆரம்பித்துள்ளது
என்பதை அனைவருக்கும் மிக மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

- சீத்தை 50/-
- பப்பிளின் 50/-
- சலஞ்சர் 50/-
- யோ / யோ, பட்டசில்க் பிரின் 75/-, 80/-
- ரெட்ரோன் கொட்டின் பிரின் 36'' சயினா 40/-
- ரெட்ரோன் கொட்டின் பிரின் 44'' சயினா 45/-
- சாறி வகைகள் 125/- 240/- 250/- 275/- 300/-
- வொயில் சாறி வகைகள் 225/- 250/- 275/- 300/- 375/- 400/-
- சேட் 150/- 200/- 250/-
- பேபி சூட் / T. சேட் 125/-
- T. சேட் சிறியது 125/-
- T. சேட் பெரியது 150/-

★ மேலும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகளும் மலிவு விற்பனை செய்கின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,**
44, 42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2985

[70373]



## "ரம்மியாஸ்" இப்பொழுது நவீன சந்தையின் உட்புறம்

ஆம்! ... உங்கள் இருபாலாருக்குமேற்ற சகல ஆடைத் தெரிவுகளும்
**தீபாவளி விசேட விலையில்**

**ரம்மியாஸ் சில்க்ஸ்** 181, நவீன சந்தை (உள்) யாழ்.

(சி/9499)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் [illegible]
[illegible] 27 10 1999 இல் [illegible]